# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2020 சனவரி

## (AA22) கிரயக் கணக்கீடும் அறிக்கையிடலும்

இவ்வினாப்பத்திரம் மொத்தமாக 10 வினாக்களை உள்ளடக்கிய 4 பகுதிகளைக் கொண்டுள்ளது. இது கிரயக் கணக்கீட்டுடன் தொடர்புடைய அடிப்படை எண்ணக்கருக்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்துள்ளது. பரீட்சார்த்திகள் சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு கோரப்பட்டிருந்தனர். விடையளிக்கும்போது உபயோகப்படுத்த வேண்டிய வினைச்சொற்களைக் கொண்ட நிரலும் வினாப்பத்திரத்துடன் வழங்கப்பட்டிருந்தது.

10 வினாக்களும் பின்வருமாறு அமைக்கப்பட்டிருந்தன :

**பகுதி A – 20 புள்ளிகள்**

20 புள்ளிகளுக்கான கட்டாய பல்தேர்வு நோக்கச் சோதனை வினாக்கள்

**பகுதி B – 25 புள்ளிகள்**

ஒவ்வொன்றும் 5 புள்ளிகளைக் கொண்ட ஐந்து கட்டாய வினாக்கள்

**பகுதி C – 30 புள்ளிகள்**

ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மூன்று கட்டாய வினாக்கள்

**பகுதி D – 25 புள்ளிகள்**

இரண்டு பகுதிகளை உள்ளடக்கிய ஒரு கட்டாய வினா. **பகுதி (a)** 11 புள்ளிகள், **பகுதி (b)** 14 புள்ளிகள்.

## பகுதி A

**வினா இல. 01** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20)

இவ்வினாவானது கிரயக் கணக்கீட்டின் நோக்கங்கள், கிரயக் கணக்கீட்டுடன் தொடர்புடைய அடிப்படையான சொற்பதங்கள், கிரயங்களின் வகைகள், மேந்தலை உறிஞ்சல், இருப்பு மட்டங்கள், இலாப நட்டமற்ற புள்ளிகள் (சமநிலைப் புள்ளிகள்) போன்ற பாடத்துடன் தொடர்புடைய பல்வேறு பரப்புகளில் பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்தது.

பரீட்சார்த்திகள் பாடம் தொடர்பில் பரந்தளவான அறிவைக் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டனர்.

இந்த வினா தொடர்பில் பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்ததுடன் குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக 13 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள்:

மிக அதிகமான பரீட்சார்த்திகளால் சரியான விடை அளிக்கப்படாத வினாவாக **வினா இல. 1.8** இல் காணப்பட்ட வினா அமைந்திருந்தது. பல பரீட்சார்த்திகளால், தரப்பட்ட கூற்றுக்கள் ''சரியானதா'' அல்லது ''தவறானதா'' என்பதைச் சரியாகக் குறிப்பிட முடியவில்லை.

(1) இந்தக் குறித்த கூற்று சரியானதாக இருந்தபோதிலும், பெரும்பாலானவர்கள் அதனைத் தவறானது எனக் குறிப்பிட்டிருந்தனர். இது பாதீடு தொடர்பில் பரீட்சார்த்திகள் போதிய அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

(2) இந்தக் குறித்த கூற்று தவறானதாக இருந்தபோதிலும், பெரும்பாலானவர்கள் அதனைச் சரியானது எனக் குறிப்பிட்டிருந்தனர். செயன்முறைக் கிரயமிடல் மீதான பரீட்சார்த்திகளின் அறிவு மேம்படுத்தப்பட வேண்டும்.

(3) இந்தக் குறித்த கூற்று சரியானதாக இருந்தபோதிலும், மேந்தலைகள் தொடர்பான அறிவு காணப்படாததன் காரணமாக பெரும்பாலானவர்கள் அதனைத் தவறானது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

(4) இந்தக் குறித்த கூற்று சரியானதாக இருந்தபோதிலும், தொடர்ச்சியான தொழிற்பாட்டுக் கிரயமிடல் மீதான அறிவு காணப்படாததன் காரணமாக பெரும்பாலானவர்கள் அதனைத் தவறானதெனக் குறிப்பிட்டிருந்தனர்.

பரீட்சார்த்திகள், கோட்பாட்டுரீதியான எண்ணக்கருக்கள் மற்றும் அவற்றின் பிரயோகங்கள் உள்ளிட்ட சகல பாடப் பரப்புகளிலும் ஆழமான புரிதலையும் அறிவையும் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி B

**வினா இல. 02** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா முதலாவதாக உள்வருவது முதலாவதாக வெளிச் செல்லுதல் (FIFO) முறையின் கீழ் களஞ்சியப் பேரேட்டைத் தயாரிக்குமாறு கேட்டிருந்தது.

எவ்வாறாயினும், பின்வரும் பொதுவான தவறுகள் அடையாளங் காணப்பட்டன:

- களஞ்சியப் பேரேட்டைத் தயாரிக்கையில் சரியான வடிவமைப்பு பயன்படுத்தப்படவில்லை, சிலர் பொருட்களின் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லுதலைக் காட்டுவதற்கு **T** கணக்குகளைத் தயாரித்திருந்தனர்.
- ஒவ்வொரு ஊடுசெயல்களினதும் பின்னரான மீதிகள் கணிப்பிடப்படுவது களஞ்சியப் பேரேடு ஒன்றின் தேவைப்பாடொன்றாக இருந்த போதிலும் அவை கணிப்பிடப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 03** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா துண்டுவீத முறைமையைப் பயன்படுத்தி, ஊழியர்களின் உழைப்புகளைக் கணிப்பதற்கான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்தது.

பரீட்சார்த்திகளிடமிருந்து சாதாரண கொடுப்பனவொன்றைக் கணிப்பீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டைவிட உற்பத்தி செய்யப்பட்ட மேலதிக அலகுகளைத் துணிவதற்கும் உபகாரக் கொடுப்பனவைக் கணிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டது.

எவ்வாறாயினும், பின்வரும் பொதுவான தவறுகள் அடையாளங் காணப்பட்டன:

- பல பரீட்சார்த்திகள் **ஊழியர் B** யின் வெளியீடான 1,120 அலகுகளை ரூபா 15/- இனால் பெருக்குவதன் மூலம் அவரது சாதாரண கொடுப்பனவை அடையாளங் காண்பதற்குத் தவறியிருந்தனர். அதற்குப் பதிலாக, அவர்கள் **ஊழியர் A** யின் வெளியீட்டை (960 அலகுகள்) பயன்படுத்தி கணிப்பீடுகளைத் தொடர்ந்திருந்தனர்.
- எதிர்பார்க்கப்பட்ட அலகுகளைவிட ஊழியர்கள் அதிகளவான அலகுகளை உற்பத்தி செய்த சந்தர்ப்பத்தில் மொத்த உழைப்பினைத் துல்லியமாகக் கணிப்பீடு செய்வதற்கு வேறு சில பரீட்சார்த்திகளுக்கு இயலாமற் போயிருந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 04** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா இரண்டு கணக்குகளைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தியது: அதாவது பொருள் இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் WIP கட்டுப்பாட்டுக் கணக்கு.

எவ்வாறாயினும், பின்வரும் பொதுவான தவறுகள் அடையாளங் காணப்பட்டன:

- பல பரீட்சார்த்திகள் இந்த இரண்டு கணக்குகளினுள்ளும் உள்வாங்க வேண்டிய உருப்படிகளை மாற்றி மாற்றி (குழப்பி) எடுத்திருந்தனர்.
- பரீட்சார்த்திகள், உரிய கிரயப் பேரேட்டுக் கணக்குகளினுள் உள்வாங்கப்படும் ஒவ்வொரு உருப்படிக்குமான காரணங்களை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 05** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா வேலைக் கிரயமிடல் முறையைச் சரியாகப் பிரயோகிப்பதற்கும் குறிப்பிட்ட வேலைக்காக அறவிடப்பட வேண்டிய (நிர்ணயிக்கப்பட வேண்டிய) விலையைத் தீர்மானிப்பதற்குமான பரீட்சார்த்திகளின் ஆற்றலைப் பரீட்சித்திருந்தது.

தரப்பட்ட இரண்டு பிரிவுகளுக்குமான நேர் கூலிகளையும் மேந்தலைகளையும் கணிப்பிடுவதும் குறிப்பிட்ட வேலையின் இலாப எல்லையைப் பிரயோகித்து விற்பனை விலையைப் பெறுவதும் பரீட்சார்த்திகளிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டது.

எவ்வாறாயினும், பின்வரும் பொதுவான தவறுகள் அடையாளங் காணப்பட்டன:

- இலாப எல்லை (margin) மற்றும் குறித்த (mark-up) விலை ஆகிய பதங்கள் பற்றிய விளக்கம் குறைவாகவே காணப்பட்டது. – பல பரீட்சார்த்திகள் எளிதாக மொத்தக் கிரயத்தில் 20% இனைப் பிரயோகித்து விற்பனை விலையை பெற்றிருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் இதில் கூறப்பட்ட இரண்டு பிரிவுகளையும் இரண்டு பொருட்களாகக் கருதி வினாவுக்கு விடையளித்திருந்தனர்.
- இலாபமானது கிரயம் (எல்லை) மற்றும் விற்பனை விலை (குறித்த விலை) ஆகியவற்றின் அடிப்படையில் துணியப்பட முடியும் என்பதுடன் பரீட்சார்த்திகள் இந்த இரண்டு முறைகளையும் தெளிவாக வேறுபடுத்தக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 06** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா கிரயக் கணக்கீட்டிற்கும் நிதிக் கணக்கீட்டிற்குமிடையிலான இலாப இணக்கக் கூற்றினைத் தயாரிக்குமாறு பரீட்சார்த்திகளைத் தேவைப்படுத்தியது.

எவ்வாறாயினும், பின்வரும் பொதுவான தவறுகள் அடையாளங் காணப்பட்டன:

- பல பரீட்சார்த்திகள் இலாப ஒப்பீட்டு எண்ணக்கருவைப் பிழையாக விளங்கியிருந்தனர். மேலும், அவர்கள் நிதிக் கணக்கீட்டு இலாபத்தை எடுத்து கிரயக் கணக்குகளின்படியான எண் பெறுமானங்களைச் சேர்த்திருந்தனர். அவர்களில் சிலர் கிரயக் கணக்குகளுக்கும் நிதிக் கணக்குகளுக்குமிடையிலான வேறுபாட்டை எடுத்திருக்கவில்லை. அவர்கள் இறுதி எண் பெறுமானங்களை மாத்திரமே கருத்திற் கொண்டிருந்தனர்.
- இணக்கத்தைச் சரியாகத் தயாரித்திருந்த பரீட்சார்த்திகள்கூட இறுதி இருப்பு மற்றும் ஆரம்ப இருப்புகளுக்கான செம்மையாக்கங்களைச் செய்வதில் தவறு விட்டிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி C

**வினா இல. 07** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இவ்வினா செயன்முறைக் கிரயவியல் பற்றிய அறிவைச் சரியாகப் பிரயோகிப்பதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றலைப் பரீட்சித்திருந்தது.

செயன்முறைக் கிரயவியலுடன் தொடர்புடைய இந்த வினாவுக்கு பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர்.

எவ்வாறாயினும், பின்வரும் பொதுவான தவறுகள் அடையாளங் காணப்பட்டன:

- செயன்முறைக் கிரயவியலில் சாதாரண இழப்பு மற்றும் அசாதாரண இழப்பு ஆகிய எண்ணக்கருக்களைப் பரீட்சார்த்திகள் பிழையாக விளங்கியிருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் செயன்முறைக் கணக்கின் இரண்டு பக்கங்களிலும் மாற்றி மாற்றிப் (குழப்பி) பதிவுகளைச் செய்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 08** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இவ்வினா மேந்தலை ஒதுக்கீட்டுக் கூற்றினைத் தயாரிக்குமாறும் ஒவ்வொரு பிரிவுக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதத்தைக் கணிப்பிடுமாறும் பரீட்சார்த்திகளைத் தேவைப்படுத்தியது.

செயலாற்றுகை நியாயமான அளவுக்கு நன்றாகக் காணப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குத் திருப்திகரமானளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

எவ்வாறாயினும், பின்வரும் பொதுவான தவறுகள் அடையாளங் காணப்பட்டன:

- பல பரீட்சார்த்திகள், உற்பத்திப் பிரிவுக்கும் சேவைப் பிரிவுக்குமிடையே மேந்தலைகளை ஒதுக்கீடு செய்யும்போது கணிப்பீட்டு வழுக்களை விட்டிருந்தனர்.

- அதிகளவான பரீட்சார்த்திகள் மேந்தலையின் ஆரம்ப ஒதுக்கீட்டைச் சரியாக மேற்கொண்டிருந்த போதிலும், அவர்கள் சேவைப் பிரிவிலிருந்து உற்பத்திப் பிரிவுக்கான மேந்தலையின் பகிர்வினைச் சரியாகச் செய்திருக்கவில்லை.
- சில பரீட்சார்த்திகள் சேவைப் பிரிவுகளின் மேந்தலைப் பகிர்வு வீதங்களை குழப்பியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 09** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இவ்வினா விற்பனைப் பாதீடு, உற்பத்திப் பாதீடு மற்றும் நேர் பொருள் பாவனைப் பாதீடு ஆகியவற்றைத் தயாரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது.

இங்கு, பின்வரும் பொதுவான தவறுகள் அடையாளங் காணப்பட்டன:

- வினாவில் விற்பனை (அலகுகளில்), இறுதி இருப்பும் ஆரம்ப இருப்பும் (அலகுகளில்) என்பன தரப்பட்டிருந்த போதிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் உற்பத்திப் பாதீட்டினைச் சரியாகத் தயாரித்திருக்கவில்லை.
- சில பரீட்சார்த்திகள் பாதீட்டைத் தயாரிக்கும்போது அடிப்படையான கோட்பாடுகள் பற்றிய விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை, குறிப்பாக எங்கு ஆரம்பிப்பது என்பது பற்றிய விளக்கம் அவர்களிடம் காணப்படவில்லை.
- அதிகளவான கடந்தகால வினாப்பத்திரங்களில் பயிற்சி செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி D

**வினா இல. 10** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

இவ்வினா இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. **பகுதி (A)** ஆனது தரப்பட்ட முரண்களைக் கணிப்பிடுமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. **பகுதி (B)** ஆனது எல்லைக் கிரயமிடல் முறையின் கீழ், வருமானக் கூற்றைத் தயாரிக்குமாறும் எல்லைக் கிரயமிடல் முறையின் இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுமாறும் பரீட்சார்த்திகளிடம் கேட்டிருந்தது.

**பகுதி (A)** இன் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்த அதேவேளை **பகுதி (B)** இற்கான செயலாற்றுகை மோசமானதாக இருந்தது.

பின்வரும் பொதுவான தவறுகள் அடையாளங் காணப்பட்டன:

- முரண்களைக் கணிப்பீடு செய்யும்போது, அதிகளவான பரீட்சார்த்திகள் உரிய சூத்திரத்தைக் குறிப்பிட்டிருக்கவில்லை.
- பெரும்பாலான பரீட்சார்த்திகள் உரிய முரண், சாதகமானதா அல்லது பாதகமானதா என்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கவில்லை.
- பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (B)** இற்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை.

- குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வினாவில் கேட்கப்படாத உறிஞ்சல் கிரயமிடல் முறையின் கீழ், வருமானக் கூற்றினைத் தயாரித்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக்கொள்ளாது வினாவில் தரப்பட்ட உண்மையான மற்றும் பாதிடப்பட்ட பெறுமானங்களை ஒப்பீடு செய்து அனுகூலங்களை எழுதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதற்கு கவனத்திற்கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்**

1. வினாப்பத்திரத்தைக் கையிலெடுத்ததும் அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.
2. வினாவைப் பல தடவைகள் வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும்.
3. சுய கற்றல் பாடப் புத்தகத்திலுள்ள உதாரணங்களைச் செய்துபார்த்து பயிற்சியெடுப்பதும் முக்கியமானதாகும்.
4. எண்கணித வழுவைத் தவிர்ப்பதற்காக கணிப்பீடுகளை மீளவும் பரிசீலிப்பதுடன் சகல தொடர்புபட்ட கணிப்பீட்டு வேலைகளையும் தெளிவாகக் காட்டவும். நீங்கள் கணிப்பீட்டைச் செய்யும்போது ஏதாவது எடுகோள்களை எடுப்பீர்களாயின் அவற்றையும் தெளிவாகக் குறிப்பிடவும்.
5. பரீட்சையின்போது உங்களுடைய நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும். நேர முகாமைத்துவத்தில் ஏற்படும் அசௌகரியத்தைத் தவிர்ப்பதற்காக நேரத்தை வரையறுத்து, அந்நேரத்தினுள் கடந்தகால வினாப்பத்திரங்களைச் செய்துபார்த்து பயிற்சி பெறுதல் வேண்டும்.
6. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், உங்களுடைய வினா இலக்கங்களும் சுட்டெண்ணும் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.
7. கடந்தகால வினாக்களுக்கு விடையளித்துப் பார்ப்பதன் மூலம், பாடம் தொடர்பான அறிவையும் நீங்கள் விடை எழுதும் ஆற்றலையும் மேம்படுத்திக்கொள்ள முடியும்.
8. வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் பட்டியல் வினாப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு விடையளித்தல் வேண்டும்.
9. ஒவ்வொரு பாடப் பரப்பும் தொடர்பான கோட்பாட்டு ரீதியான விடயங்களை நன்றாகக் கற்றுக்கொள்ளவும். கோட்பாட்டு ரீதியான வினாக்களுக்கு நன்றாக விடையளிக்கவும். இது உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற வழிவகுக்கும்.
10. சித்தியடைதல் என்ற பிரதான எண்ணத்துடன் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -